பக்கங்கள் : எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 13 திங்கட்கிழமை (30.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 334

# ஏ-9 பாதையைத் திறக்க மறுத்தது அரசு

# முன்னேற்றம் எதுவுமின்றி முடிந்தது பேச்சு

## மனிதாபிமான நெருக்கடிகள் தீர உத்தரவாதம் கிடைத்தால் மட்டுமே அடுத்த சந்திப்புக்குப் புலிகள்

- ஜெனிவாவிலிருந்து ந.வித்தியாதரன் -

ஜெனிவா,ஒக்ரோபர் 30

மூடப்பட்டுள்ள ஏ-9 பாதையைத் திறப்பதற்கு இலங்கை அரசாங்கம் விடாப்பிடியாக மறுத்துவிட்டது. அதன் விளைவாக இரண்டுநாள்களாக இங்கு நடைபெற்ற விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் எவ்வித முன்னேற்றமும் இன்றி முடிவடைந்துவிட்டன.

அதன் காரணமாக அடுத்த சுற்றுப் பேச்சுக்கான திகதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

எனினும் அடுத்த சுற்றுப் பேச்சுக்கு முன்னர் ஏ-9 பாதை திறக்கப்படுமாயின் அந்தப் பேச்சுக்களுக்கான திகதிகளைத் தீர்மானிக்கத் தாம் தயாராக உள்ளதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குக் காரணமான மூடப்பட்டுள்ள ஏ-9 வீதியைத் திறக்க அரசாங்கம் மறுத்துவிட்டதால் பேச்சுக்கள் இணக்கப்பாடின்றித் தோல்வியடைந்ததாக நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் நோர்வே அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு ஏ-9 பாதையைத் திறக்கமுடியாது என்று அரச பேச்சுக் குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா அறிவித்தார்.

ஏ-9 பாதையைத் திறப்பதற்கு நோர்வே ஏற்பாட்டாளர்களும் கண்காணிப்புக் குழுவும் தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

பாதுகாப்பு நிலைமை சீரடைந்துவிட்டதாக அனுசரணையாளர்களான நோர்வேயும் போர்நிறுத்தக் கணக்காணிப்புக் குழுவும் உத்தரவாதம் தந்த பின்னரே அடுத்த

(08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா எம்.பி. கிஷோர் வீட்டின் மீது கிரனேட் வீச்சு

வவுனியா,ஒக். 30

வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோரின் இல்லத்தின் மீது நேற்றிரவு இனந்தெரியாதோரால் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

வவுனியா இறம்பைக் குளத்தில் உள்ள அவரது வீட்டுக்கு கிரனேட்டுக்கள் வீசப்பட்டபோது கிஷோர் அங்கு இருந்தார் என்றும் மயிரிழையில் தப்பினார் என்றும் நேற்றிரவு முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

நாடாளுமன்ற உறுப்பினர் இல்லத்தின் மீது ஆறு கிரனேட்டுக்கள் வீசப்பட்டதாகவும் அங்கு காவல் கடமையில் இருந்து பொலீஸார் ஒருவர் காயமுற்றார் என்றும் அறியவந்தது.

வெடிக்காத இரண்டு கிரனேட்டுக்களைத் தாம் மீட்டதாக வவுனியா பொலீஸார் தெரிவித்தனர். (அ)



நேற்றைய இரண்டாம் நாள் பேச்சின் முடிவில் இரு தரப்புத் தலைவர்களும் கைலாகுகொடுத்தபோது...

## இராணுவ நடவடிக்கை மேற்கோள்வதில்லை: இரு தரப்பினரும் உறுதிமொழி வழங்கியுள்ளனர்

### எரிக் சொல்ஹெய்ம் தகவல்



ஜெனிவா,ஒக்.30

இராணுவ நடவடிக்கை களை மேற்கொள்வதில்லை என்று இரு தரப்பினரும் உறுதிதந்துள்ளனர் என்று நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தகவல் வெளியிட்டார்.

ஜெனிவாப் பேச்சு முடிவில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் ஏ-9 பாதையை திறக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். அரசு அதை மறுத்ததால் அடுத்த கட்டப் பேச்சுத் தொடர்பான திகதி நிர்ணயிக்கப்படவில்லை. இணக்கம் காணப்படவில்லை.

சமாதான முயற்சிகளில் இரு தரப்பினருடனும் தொடர்ந்தும் நோர்வே முயற்சிகளை மேற்கொள்ளும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை சீராக - செம்மையாக - கடைப்பிடிப்பதாக இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

இலங்கை சமாதான விவகாரத்தில் சர்வதேசத்தின் உறுதிப்பாட்டை நிறைவு செய்யுமாறு இரு தரப்பினரும் கோரினர்.

இணைத் தலைமை நாடுகளின் கோரிக்கையை ஏற்றுப்பேச்சில் இரு தரப்பினரும் கலந்துகொண்டதையிட்டு நாம் சந்தோஷம் அடைகின்றோம் - என்றார் அவர். (1)

## பாதுகாப்புக் காரணங்களுக்காக ஏ-9 வீதியை இப்போது திறக்கமுடியாது

### அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவிப்பு

ஜெனிவா,ஒக்.30

பாதுகாப்பு நிலைமை காரணமாக ஏ-9 பாதை தற்போது முகமாலையில் மூடப்பட்டுள்ளது. இது ஒரு தற்காலிக ஏற்பாடு. பாதுகாப்பு நிலைமைகள் சீராகும் போது அந்தப் பாதையைத் திறக்க முடியும்.

ஆனால் இப்போது அதனைப் பாதுகாப்புக் காரணங்கள் கருதி திறக்க முடியாது. கடல் வழியில் மட்டும் குடாநாட்டுக்கான பொருள்களை எடுத்துச்செல்ல முடியும்.

ஜெனிவாவில் இடம்பெற்ற பேச்சுக்களின் முடிவில் நடந்த ஊடகவியளாளர் மாநாட்டில் அரச பேச்சுக்குழுத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

குடாநாட்டில் உள்ள 6 லட்சம் மக்களுக்கு உணவு கிடைக்கவில்லை என விடுதலைப் புலிகள் பேச்சின் போது தெரிவித்தனர்.

இதுவரை எவ்வளவு பொருள்கள் கப்பல் மூலம் குடாநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரங்களை அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே புள்ளி விவரங்களுடன் சமர்ப்பித்தார்.

முழு அளவில் கப்பல் மூலம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பேச்சுக் குழுவினர் உடனடியாக வன்னி திரும்புவர்

### முன்னர் திட்டமிட்ட நோர்வே விஜயம் ரத்து

ஜெனிவா,ஒக். 30

ஜெனிவா பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக இங்கு வந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழுவினர் முன்னர் திட்டமிட்டவாறு நோர்வேக்குச் செல்லமாட்டார்கள்.

போக்குவரத்து ஏற்பாடுகளைப் பொறுத்து அனேகமாக இன்னும் இரண்டொரு நாள்களில் அவர்கள் வன்னிக்குத் திரும்புவர்.

கடந்த இரண்டு நாள்களாக நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் சுமுகமாக நடைபெறும் பட்சத்தில் நோர்வே சென்று, பல நாடுகளில் இருந்தும் வந்துசேரும் விடு தலைப் புலிகளின் அரசமைப்பு நிபுணர் குழுவைச் சந்தித்து கலந்துரையாடுவதற்குப் (08ஆம் பக்கம் பார்க்க)

## உடுப்பிட்டியில் கிளைமோர் வெடித்து 6 பேர் பரிதாப மரணம்; இருவர் படுகாயம்!

உடுப்பிட்டி,ஒக். 30

உடுப்பிட்டி - வல்வெட்டித்துறை பிரதான வீதியில் - வல்வெட்டி பாலப் பகுதியில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இடம் பெற்ற கிளைமோர் வெடிப்புச் சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்தனர். இருவர் படுகாயங்களுக்கு இலக்காகினர்.

சைக்கிள் ஒன்றில் எடுத்துவரப்பட்ட கிளைமோர் குண்டு ஒன்றே வெடித்தது என்று அறியவந்தது.

குறிப்பிட்ட சைக்கிளைச் செலுத்தி வந்ததாகக் கூறப்படும் நபர் உட்பட 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்தவர்களில் குடும்பப் பெண் ஒருவரும் அடங்குவார்.

தர்மலிங்கம் ராகவி(வயது 54 - இவகடி, உடுப்பிட்டி), விஜயதாஸ் சுரேந்திரா (வயது 18 - தர்மகுலசிங்கம் வாசிகசாலையடி, வல்வெட்டித்துறை), செல்வமாணிக்கம் ஞானேந்திரன்(வயது 16 - கருணாநிதி வாசிகசாலையடி, வல்வெட்டித்துறை), இராசதுரை சசிகரன்(வயது 23 - கெருடாவில் தொண்டைமானாறு), தர்ம

(08ஆம் பக்கம் பார்க்க)

## வந்தாறுமூலையில் துப்பாக்கிச் சூடு நால்வர் படுகாயம்

மட்டக்களப்பு,ஒக்.30

மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிஅளவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒரு வயதுக் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்தார்கள்.

பி.விவேகானந்தன் (வயது -22), பி.செல்வராணி (வயது -19), பி.வினோசி

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஏ-9 வீதியை திறக்க அரசு உடன்படாமை

# மக்களை மீண்டும் போர்ச் சூழலுக்குள் தள்ளி மனிதப் பேரவலத்தைத் தோற்றுவிக்கும் முயற்சி

### செய்தியாளர் மாநாட்டில் தமிழ்ச்செல்வன்

ஜெனிவா ஒக்.30

ஏ- 9 வீதி மூடப்பட்டதை அடுத்து; குடாநாட்டில் வசிக்கும் 6 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் எதிர்நோக்கியுள்ள பெரும் அவலங்கள் குறித்து ஜெனிவாப் பேச்சுக்களில் விரிவாக எடுத்து விளக்கினோம். ஸ்ரீலங்கா அரசுப் பிரதிநிதிகள், அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர்.

இந்த நிலைமையானது, குடாநாட்டில் வாழும் மக்களை அறுபதினாயிரம் ஸ்ரீலங்காப் படையினரின் ஆக்கிரமிப்பின் கீழ் ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள் வாழும் நிலைக்குக் கொண்டுசென்றுள்ளதுடன் மக்களை மீண்டும் போர்ச் சூழலுக்குள் தள்ளி மனிதப் பேரவலத்தைத் தோற்றுவிக்கும் முயற்சியாகவே நாம் கருகின்றோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

ஜெனிவாவில் நடைபெற்ற இரண்டு நாள் பேச்சுக்களின் இறுதிநாளான நேற்று - பேச்சுக்களின் இறுதியில் - அரசு - விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுவினர் தனித்தனியே செய்தியாளர் மாநாடுகளை நடத்தினர்.

விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுவின் தலைவரான அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இரண்டு நாள் பேச்சுக்கள் தொடர்பான விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை நீண்ட அறிக்கை ஒன்றின் மூலம் சமர்ப்பித்து உரையாற்றினார்.

தமிழ்ச்செல்வன் ஆற்றிய உரையின் முழு விவரமும் வருமாறு:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் ஸ்ரீலங்கா அரசுப் பிரதிநிதிகளும் நோர்வே அரசின் ஆதரவுடன் ஒக்ரோபர் 28ஆம், 29ஆம் ஆகிய திகதிகளில் ஜெனிவாவில் சந்தித்து பேச்சுக்களில் ஈடுபட்டனர். இந்தப் பேச்சுக்களுக்கு சுவிற்சர்லாந்து அரசாங்கம் அனுசரணை வழங்கியது.

இணைத்தலைமை நாடுகள், கடந்த ஓகஸ்டில் வெளியிடப்பட்ட தமது அறிக்கை யில், இரண்டு தரப்பும் உடனடியாக வன்முறைகளை நிறுத்தி, இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அங்கத்தவர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் வழங்கும்படியும், சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும்படியும் இரண்டு தரப்பையும் கேட்டிருந்தன.

விடுதலைப் புலிகள் தமது தொடக்க உரையின்போது, ஸ்ரீலங்கா அரசாங்கத்தினாலும், அதன் பாதுகாப்புப் படைகளாலும் ஏற்படுத்தப்பட்ட அவசர மனிதாபிமானப் பிரச்சினைகள் பற்றிக் கருத்துத் தெரிவித்திருந்தார்கள். யுத்தநிறுத்த உடன்பாட்டினை 100 வீதம் அமுல்படுத்துவதும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினைப் பலப்படுத்துவதும் வடக்கு-கிழக்கில் வாழும் மக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலையினைக் கொண்டுவரும் என்றும், சமாதான முயற்சிகளில் ஒரு திருப்திகரமான தீர்வினை எட்டுவதற்கு உதவும் என்றும் விடுதலைப் புலிகள் தமது உரையில் தெரிவித்தார்கள்.

மக்களுடைய துன்பங்களை பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டினார்கள். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், ஏ-9 பாதை மூடப்பட்டமையானது யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் வாழ்ந்து வந்த ஆறு இலட்சத்திற்கும் அதிகமான மக்களை, அறுபதாயிரம் ஸ்ரீலங்கா ஆயுதப் படைகளின் ஆக்கிரமிப்பின் கீழ் ஒரு திறந்த வெளிச்சிறைச்சாலைக்குள் வாழும் நிலைக்குள் கொண்டுசென்றுள்ளது என விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தார்கள்.

இப்பாதை மூடப்பட்டதானது புதிய பேர்லின் சுவரினைத் தோற்றுவிக்கின்றது என விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டினர். மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கான உரிமையை மீறுகின்ற நடவடிக்கையாக ஏ-9 பாதையை மூடியமையானது அமைவதுடன் அது யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறுவது மட்டுமன்றி அது குடும்ப உறவினர்கள் பிரிவதற்கும் மனித அவலத்திற்கும் வழி வகுத்தது.

**உணவை மட்டும் வழங்குவது சிறைக் கைதிகளுக்கு உணவளிப்பது போன்றது**

உணவை மட்டும் வழங்குவது சிறைக் கைதிகளுக்கு உணவளிப்பது போன்றதென விடுதலைப் புலிகள் குறிப்பிட்டனர். ஏ-9 பாதையை மீளத் திறப்பதற்கு மறுப்பதற்குத் திருப்திகரமான காரணங்கள் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை. ஏ-9 பாதை 1994-2002 வரை மூடப்பட்டிருந்ததை ஸ்ரீலங்கா அரசாங்கம் சுட்டிக்காட்டியது. யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியிலேயே அவ்வாறு நடைபெற்றதென்பதைச் சுட்டிக்காட்டிய விடுதலைப் புலிகள், மக்களை மீண்டும் போர்ச் சூழலுக்குள் தள்ளி, ஒரு மனிதப் பேரவலத்தைத் தோற்றுவித்து, ஓர் அடக்கப்பட்ட மக்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்கே ஸ்ரீலங்கா அரசாங்கம் விரும்புகிறதா என்று கேள்வி எழுப்பினர்.

விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்த உடன்படிக்கை மற்றும் ஜெனிவா - 1 ஆகியவற்றை அமுல்படுத்துவது பற்றியும் கண்காணிப்புக் குழுவின் பங்களிப்பை வலுப்படுத்துவது பற்றியும் வலியுறுத்தினர். எவ்வாறிருந்தும், ஸ்ரீலங்கா அரசாங்கம் மேற்குறிப்பிட்ட விடயத்தில் மிகக்குறைந்தளவே கவனம் செலுத்தியது. தமது அதிருப்தியை வெளிப்படுத்திய விடுதலைப் புலிகள் இரண்டு தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதான முயற்சிகள் இடம்பெறுவதற்கு அத்திவாரமாக அமைந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை தவிர்ந்த வேறொரு ஆவணம் இருப்பின் அதை இனங்காட்டும்படி கேட்டனர்.

இரு பிரதான சிங்களக் கட்சிகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை விடுதலைப் புலிகள் வரவேற்றனர். இனப்பிரச்சினை தொடர்பாக தெற்கிலுள்ள அரசியல் கட்சிகளுக்கிடையே ஒரு இணக்கப்பாடு எட்டப்பட்ட பின்னர் அரசியல் பேச்சுக்களில் ஈடுபடுவதற்குத் தாம் தயாராக இருப்பர் என விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் இயல்புநிலை ஏற்படுத்தப்பட்டு, ஒரு உகந்த சூழ்நிலை தோற்றுவிக்கப்படும் என விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கின்றனர்.

கலந்துரையாடலின் போது, ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழர் தாயகத்தில் சனநாயகம் மற்றும் பன்மைத் தன்மைபற்றிய விடயங்களை எழுப்பியது. ஸ்ரீலங்கா அரசாங்கத்தை விடத் தாம் சனநாயகக் கோட்பாடுகளுக்குத் தம்மை அர்ப்பணித்திருப்பதாகக் கூறிய விடுதலைப் புலிகள் இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகக் கட்டமைப்பிற்கான வரைபை உதாரணமாக எடுத்துக்கூறினர்.



ஜனநாயகம் மற்றும் பன்மைத்தன்மை ஆகியவற்றில் தனது ஈடுபாட்டை வெளிப்படுத்துமுகமாக ஸ்ரீலங்கா அரசாங்கம் ஆறாவது திருத்தத்தை அகற்ற முடியுமா என விடுதலைப் புலிகள் சவால் விட்டனர். ஜனநாயக வழிமுறையூடாக தனிநாட்டை அமைப்பதைத் தடுக்கும் ஸ்ரீலங்கா அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தையும் விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டினர். தமிழ் மக்களின் அபிலாசைகளை நிரூபிப்பதற்கு தமிழர் தாயகத்திலிருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரை அகற்றி சர்வதேச கண்காணிப்பாளர் முன்னிலையில் ஒரு கருத்துக்கணிப்பை நடத்துவதற்கும் விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு சவால் விடுத்தனர்.

அடுத்த சுற்றுப் பேச்சுக்களுக்கு முன்னர் ஏ-9 பாதை திறக்கப்படுமாயின் அடுத்த சுற்றுப் பேச்சுக்களுக்கான திகதிகளைத் தீர்மானிப்பதற்குத் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். எவ்வாறிருந்தும், ஸ்ரீலங்கா அரசாங்கம் இதற்கு சாதகமாகப் பதிலளிக்கவில்லை. அடுத்த சுற்றுப் பேச்சுக்களுக்கான திகதிகளைத் தீர்மானிப்பதற்கு முன்னர் ஏ-9 பாதையைத் திறப்பதற்கு நோர்வே ஏற்பாட்டாளர்களும் கண்காணிப்புக்குழுவும் தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டனர்.

- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







நேற்றைய இரண்டாம் நாள் பேச்சின்போது...

# நைஜீரியாவில் விமான விபத்து இருநூறுக்கும் மேற்பட்டோர் பலி!

அபுஜா,ஒக். 30

இருநூறுக்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு தலைநகர் அபுஜாவிலிருந்து புறப்பட்ட விமானமொன்று திடீரென விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் பயணம் செய்த அனைவரும் பலியாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

வானில் பறந்துகொண்டிருந்த விமானம் திடீரென தீப்பிடித்து எரிந்து வீழ்ந்து நொறுங்கியதாகதகவல்கள் வெளியாகியுள்ளன.

விமானம் விபத்துக்குள்ளான இடத்தை நோக்கி மீட்புப் பணிகளுக்காக இராணுவத்தினரும், பொலிஸாரும் விரைந்துள்ளனர் என்று நைஜீரிய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை -

நைஜீரியாவில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற மூன்றாவது கோர விமான விபத்து இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

•(ச)

# அரையிறுதி வாய்ப்பை இழந்தது இந்திய அணி

மொஹாரி,ஒக்.30

நேற்று நடந்த இந்திய அணியுடனான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இதன்மூலம் இந்திய அணி மினி உலகக்கிண்ண போட்டியின் அரையிறுதிச் சுற்றில் நுழையும் வாய்ப்பை இழந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 249 ஓட்டங்களை எடுத்தது.

இதனையடுத்து களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 45.4 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 252 ஓட்டங்கள் பெற்று அரையிறுதிச் சுற்றுக்குள் நுழைந்தது.

73 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலிய அணிவீரர் மார்டின் ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

(க)

# வாகனங்களுக்கு 'பாஸ்' வழங்குவது மட்டக்களப்பிலும் நடைமுறைக்கு

கொழும்பு, ஒக். 30

மட்டக்களப்பு வட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் வாகனங்களுக்கு அனுமதி (பாஸ்) வழங்கும் நடைமுறை அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பொலன்னறுவ ஊடாகச் செல்லும் வாகனங்கள் வாழைச்சேனை பொலிஸாரினால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு பாதுகாப்புத் தரப்பினரால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது - என்று மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதேபோல் கல்லடி ஊடாக கல்முனை நோக்கிச் செல்லும் வாகனங்கள் அனைத்தும் களுவாஞ்சிக்குடியில் பொலிஸ் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு 'பாஸ்' வழக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# 2008 முதல் புதிய பாட விதானத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைகள் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் புதிய பாடவிதானத்திற்கு அமைவாக நடத்தப்படவுள்ளன என கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சு விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

சகல பாடசாலைகளிலும் அடுத்த ஆண்டில் 6ஆம், 10ஆம் தரங்களிலும் 2008 ஆம் ஆண்டில் 7ஆம், 11ஆம் தரங்களிலும் 2009 ஆம் ஆண்டில் 8ஆம் தரத்திலும் 2010 ஆம் ஆண்டில் 9ஆம் தரத்திலும் புதிய பாடவிதானம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் 2008 ஆம் ஆண்டில் தோற்றவுள்ள மாணவர்கள் சமயம், மொழியும் இலக்கியமும், கணிதம் ஆங்கிலம், வரலாறு, விஞ்ஞானம் ஆகிய 6 கட்டாய பாடங்களிலும் 3 தொகுதிப் பாடங்களிலும் தோற்றவேண்டும்.

இம்மாணவர்கள் 'தொடர்பாடல் ஊடகக் கற்கை' என்னும் பாடத்தையும் தொகுதிப் பாடங்களில் ஒன்றாகத் தெரிவுசெய்து பரீட்சைக்குத் தோற்றமுடியும் - என்றுள்ளது.

(202-18-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# அத்துமீறும் சர்வதேச தலையீடு

இந்தப் பத்தியில் ஏற்கனவே நாம் சுட்டிக்காட்டிய ஒரு விடயத்தை மீண்டும் வெளிப்படுத்திக்காட்ட வேண்டிய அவசரமும் அவசியமும் எழுந்திருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சினை இரண்டு பிரதான தரப்புகளுக்கு இடைப்பட்டது.ஒருபுறம் சிங்களவர்கள் மறுபுறம் தமிழ்பேசும் மக்கள். இந்த இரண்டு பிரதான தரப்பினரே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியவர்கள். அதுவும் இப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமானால் இந்த இரண்டு தரப்புகளுமே தங்களுக்குள் பேசி உடன்பாடு கண்டு ஒரு தீர்வை எட்டவேண்டும். வேறு புற சக்திகள் எவையும் தீர்வு இதுதான் எனத் திணிக்க முயலக்கூடாது. அது அத்துமீறிய நடவடிக்கை என்று இப்பத்தியில் ஏற்கனவே தெளிவாக விளக்கியிருந்தோம்.

தீர்வுக்காகப் பேச்சு மேசைக்குச் செல்லுங்கள் எனத் தரப்புகள் மீது அழுத்தம்கொடுப்பது வேறு. அதற்காக இவ்விடயத்தில் பல்வேறு வழிவகைகளைக் கையாள்வது வேறு. ஆனால் அதற்கும் அப்பால் போய் தீர்வு இப்படித்தான் அமைய வேண்டும் எனத் தரப்புகள் மீது வரையறைகளை விதித்து - எல்லைகளை வகுத்து -அளவு மீறி செயலாற்ற முயல்வது முற்றிலும் வேறு.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாண இதுவரை காலமும் தரப்புகள் மீது அழுத்தம் கொடுத்துவந்த சர்வதேச சமூகம், அவ்விடயத்தில் தான் பொறுமையிழந்து விட்டதாகக் காட்டி அந்த அடிப்படையில் தீர்வுத்திட்டம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற வரம்புகளைத் தரப்புகள் மீது திணிக்கத் துணிந்திருக்கின்றது.

சர்வதேச சமூகத்தின் இந்த நிலைப்பாட்டை ஏற்று அங்கீகரிப்பதுபோல அந்தக் கருத்தியலை முற்றாக உள்வாங்கி, அமைதிப் பேச்சுகளில் பிரதிபலித்து மீண்டும் தவறிழைக்கத் தொடங்கியிருக்கின்றது நோர்வே அனுசரணைத்தரப்பு.

தீர்வுக்கான மார்க்கம் இப்படித்தான் அமையவேண்டும் என்ற எல்லைகளை சர்வதேசத்தின் பெயரால் தரப்புகள் மீது வலிந்து திணிக்க முயல்வதன் மூலம் ஒருபுறம் தனது அனுசரணைப் பணிப் பொறுப்பிலிருந்துதாண்டி இவ்விடயத்தில் மத்தியஸ்தராகத் தன்னை மேம்படுத்திக்கொள்ள முயலும் நோர்வே, மறுபுறம் இந்தப் பிரச்சினைக்குள் சர்வதேச சமூகத்தின் அத்துமீறிய தலையீட்டுக்கு வழிசமைப்பதன் மூலம் அமைதி முயற்சிகள் மீண்டும் குழம்பிப்போவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளைத் தானே மேற்கொள்கின்றது.

2002 - 2003 ஆம் ஆண்டுகளில் ரணில்விக்கிரமசிங்க அரசுடன் விடுதலைப்புலிகள் நடத்திய அமைதிப் பேச்சுகள் பின்னர் இறுக்கமடைந்து, தேங்கிப் பயனற்று முடிந்தமைக்கு இவ்விடயத்தில் அளவு கடந்த சர்வதேசத் தலையீட்டுக்கும் அழுத்தத்துக்கும் இடமளித்த நோர்வே அனுசரணைத்தரப்பின் போக்கும் ஒரு முக்கிய காரணம் என்பதை இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம்.

அதையும்தாண்டி, இப்போது சர்வதேச தலையீடு எல்லை மீறியிருப்பதை நேற்றுமுன்தினம் ஜெனிவாவில் நடைபெற்ற அரசு - புலிகள் பேச்சுகளின் ஆரம்பத்தில் நோர்வே அனுசரணைத் தரப்பின் சார்பில் அந்நாட்டு அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆற்றிய தொடக்கவுரை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

தமது உரையின் ஆரம்பத்தில் அமைதி முயற்சிகளின் நோக்கு பின்வரும் மூன்று விடயங்களை முக்கியமாகக் கொண்டிருக்க வேண்டும் என சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பதாக அவர் வலியுறுத்தினார்.

* இனச்சிக்கலில் பாதிப்புற்றுள்ள மக்களின் உடனடி மனிதாபிமானப் பிரச்சினைகள் விரைந்து தீர்க்கப்படவேண்டும்.

* இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, வன்முறைகள் களையப்படவேண்டும். படுகொலை செய்வோருக்கு சட்ட விலக்களிப்பு வழங்கும் முறைமை போன்றவை நீக்கப்படவேண்டும்.

* அரசியல் தீர்வை நோக்கியவையாக பேச்சுகள் முன்னேற வேண்டும்.

- இப்படி சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பதாகத் தமது தொடக்க உரையில் குறிப்பிட்ட சொல்ஹெய்ம், பேச்சுகளின் மார்க்கம் இப்படித்தான் அமைய வேண்டும் என்பது குறித்து சர்வதேச சமூகத்தின் மத்தியில் விசாலமான உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டு அது தொடர்பான நான்கு அம்சங்களையும் விவரித்தார்.

* 2002 - 2003 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஆறு சுற்றுப் பேச்சுகளிலும் கடந்த பெப்ரவரியில் ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுகளிலும் எட்டப்பட்ட முடிவுகளின் தொடராக - தொடர்ச்சியாக - அவற்றை ஏற்றுக்கொண்டு - இனிமேல் இடம்பெறும் முயற்சிகள் அமையவேண்டும்.

* யுத்தநிறுத்த உடன்பாட்டை ஏற்று முழு அளவில் அதை நடைமுறைப்படுத்தி அதை மேம்பாடடையச் செய்யும் வகையில் அதனடிப்படையில் செயற்பாடுகள் அமையவேண்டும்.

* 2002 இறுதியில் ஒஸ்லோவில் காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் தமிழர்கள், முஸ்லிம்கள் உட்பட சகல இனத்தவர்களினதும் சட்டபூர்வமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் வகையில் தீர்வு அமையவேண்டும்.

* இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு போன்றவற்றை உள்ளடக்கி, உறுதிப்படுத்தும் தீர்வே காணப்படவேண்டும்.

- இவையே சர்வதேச சமூகம் உடன்பாடு கண்டு வெளியிடும் மார்க்கம் என சொல்ஹெய்ம் அறிவித்தார்.

பொதுவாகப் பார்த்தால் தீர்வு இந்த அடிப்படையில்தான் அமைய வேண்டும் என்ற வரையறை தொடர்பாக சர்வதேசத்தின் பெயரால் திணிக்கப்படும் இந்த அம்சங்கள் சரியானவையாக - நீதியானவையாக - தென்பட்டாலும் அவை இப்பிரச்சினைக்கு சுயாதீனமாக - சுதந்திரமாக - செயற்பட்டுத் தீர்வு காண்பதற்கு தரப்புகளுக்கு இருக்கும் உரிமைகளில் அத்துமீறித் தலையிடுவனவாக அமைவதை நாம் அவதானிக்க முடியும்.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை தமது அரசியல் எதிர்காலத்தை - தகைமையை - தாமே தீர்மானித்துக் கொள்வதற்கு தமக்குள்ள உரிமையில் யாரும் அத்துமீறி - அளவு கடந்து - தலையீடு செய்வது ஏற்கத்தக்கதல்ல என்பதே அவர்களது நிலைப்பாடு.

இந்திய வல்லாதிக்கத்துக்கே இதனை உறைப்பாக உணர்த்தியவர்கள் தமிழர்கள். அதற்காகத் தமது பொதுமக்கள், போராளிகள் எனப் பல்லாயிரக்கணக்கானோரின் உயிர்களையும், உதிரத்தையும், உடைமைகளையும் ஈகம் செய்தவர்கள் அவர்கள். பல்வேறு அபிவிருத்திப் பின்னடைவுகளை எதிர்கொண்டவர்கள் அவர்கள்.

எனவே, தமது அரசியல் தகைமையைத் தாமே தீர்மானிப்பதற்கு தமிழர்களுக்கு இருக்கின்ற வரலாற்று ரீதியான - பறிக்கப்பட முடியாத - உரிமையை மழுங்கடிக்கும் விதத்தில் சர்வதேச தலையீட்டுக்கு இவ்விடயத்தில் இடமளிப்பது நோர்வே அனுசரணைத் தரப்பு இழைக்கும் பெரும் தப்பிதமாக அமையப்போகின்றது.

இவ்விவகாரத்தில் அனுசரணைப் பொறுப்பைத் தாண்டி மத்தியஸ்தப் பணிக்கு தன்னை உயர்த்திக்கொள்ளும் விதத்தில் செயற்பட முனையும் நோர்வே அது குறித்து ஆழமாகச் சிந்திப்பது நல்லது. இது கத்தியில் நடப்பது போன்ற விவகாரம். பிழைத்தால் நோர்வேயின் கடந்த ஏழு ஆண்டு கால மெச்சத்தக்க பணி வீணே அவமாகிவிடும்.

## கையிருப்பில் இருந்த டீசல் முற்றாகத் தீர்ந்துவிட்டது

# போக்குவரத்துச் சபை நடத்தும் பஸ் சேவைகள் இன்று முதல் இடைநிறுத்தப்படுவதாகத் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.30

இலங்கை போக்குவரத்துச் சபையினால் நடத்தப்படும் குடாநாட்டின் சகல இடங்களுக்குமான பஸ் சேவைகள் அனைத்தும் இன்று முதல் இடைநிறுத்தப்படும் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

கையிருப்பில் இருந்த டீசல் தீர்ந்துவிட்டதை அடுத்து; இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் -

இதன்படி யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் ஆகிய சாலைகளால் நடத்தப்படும் பஸ் சேவைகள் இன்று முதல் இடைநிறுத்தப்படுவதாகவும் - போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் உள்ள சாலைகள் ஊடாக நடத்தப்படும் பஸ் சேவைகளுக்கு நாளாந்தம் 2 ஆயிரம் லீற்றர் டீசல் தேவைப்படுகின்றது. ஆயினும், கடந்த சனிக்கிழமை 3 ஆயிரத்து 300 லீற்றர் டீசல் கிடைத்தது. இந்த டீசலும் நேற்று மாலையுடன் தீர்ந்துவிட்டது.

இதனையடுத்து, நேற்று மாலையுடன் சகல இடங்களுக்குமான பஸ் சேவைகளை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

3 நாள்களுக்கு ஒருமுறை 6 ஆயிரம் லீற்றர் டீசலைப் பவுஸர் மூலம் எடுத்து வருவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை குறிப்பிட்ட அளவிலும் அரைவாசி டீசலே கிடைத்தது.

இதனால் பஸ் சேவையை உடனடியாக - இன்று திங்கட்கிழமை முதல் இடைநிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை -

வடமராட்சிக்கான போக்குவரத்துச் சேவைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமையுடன் இடைநிறுத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் - தனியார் மினி பஸ்கள் வழமை போன்று இன்று சேவையில் ஈடுபடும் எனக் கூறப்பட்டது.

(88-173-155-202)

# திருமலை மாவட்டச் செயலகத்தை கந்தளாய்க்கு மாற்றுவதற்கு முயற்சி

## தமிழ் அரச ஊழியருக்குச் சிரமம் ஏற்படும் எனச் சுட்டிக்காட்டு

திருகோணமலை, ஒக்.30

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் முக்கிய திணைக்களங்களை கந்தளாய்ப் பகுதிக்கு இடம் மாற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று நம்பகமாகத் தெரியவந்தது.

மாவட்டச் செயலகம், முக்கிய திணைக்களங்கள், மாகாண சபை அலுவலங்கள் தற்சமயம் நகரப் பகுதியில் இயங்கி வருகின்றன.

திருகோணமலை நகரப் பகுதியை 'மெற்றோ' நகரமாக்கும் திட்டத்தின் கீழ் இந்த அலுவலகங்களை கந்தளாய்ப் பகுதிக்கு இடமாற்ற முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மாகாண ஆளுநர் மற்றும் அரச அதிபர் ஆகியோர் இந்த அலுவலகங்களை இடமாற்றும் செயற்பாடுகளில் தீவிரமாகச் செயற்படுகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

கந்தளாய்க்கும் தம்பலகாமத்துக்கும் இடையில் உள்ள துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணியில் கைத்தொழில்களையும் கப்பல் கட்டுமான தொழில்களையும் ஆரம்பிக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மேற்படி இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வசதியாக மாவட்ட செயலகத்தை உடனடியாக கந்தளாய்க்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக மாகாண சபை அலுவலகங்களையும் அந்தப் பகுதிக்கு இடமாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் மூலம் இந்த அலுவலகங்களில் பணிபுரியும் தமிழ் அரச ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை-

திருகோணமலை அரச அதிபராகப் பணியாற்றும் இளைப்பாறிய இராணுவ அதிகாரி தற்சமயம் கந்தளாய் இராணுவ முகாமில் இருந்தே பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (1)

# அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கு ரயில் நிலையப் பகுதியில் தற்காலிக குடியிருப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.30

தீவகத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து அல்லைப் பிட்டியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு யாழ்.ரயில் நிலையப் பகுதிகளில் தற்காலிக குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான வேலைத் திட்டங்களை வேல்ட் விஷன் நிறுவனம் இன்று ஆரம்பிக்கின்றது.

இதன் முதற்கட்டமாக இன்று திங்கட்கிழமை ரயில் நிலையப் பகுதிகளைத் துப்புரவு செய்யும் வேலைகள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - மண்டைதீவுப் பகுதியைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு மானிப்பாய் பகுதியில் தற்காலிக குடியிருப்புகள் அமைத்துத் தருவதாகக் கூறப்பட்டதாகவும் -

ஆனால், இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் - யாழ்.புனித மரியாள் பாடசாலையில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (203-111-79)

# ஓட்டோ உரிமையாளர் உரும்பிராயில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஒக்.30

உரும்பிராய் தெற்கு, உரும்பிராயில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த ஓட்டோ உரிமையாளரான செல்லத்துரை சுதர்சன் (வயது-27) என்பரே கொலை செய்யப்பட்டவராவார்.

தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றில் பணியாற்றும் இவர், நேற்று மதியம் தனது வீட்டு வாசலில் நின்றபோது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுவிட்டனர் என்று கூறப்பட்டது.

காயமடைந்ததாகக் கூறி அவரது உறவினர்கள் அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வந்தனர் என்றும் -

அவர், ஏற்கவே இறந்து விட்டதாக டாக்டர்கள் உறுதிப்படுத்தினர் என்றும்- தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த மரணம் குறித்து யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும் படி நீதிவான் உத்தரவிட்டார். (202-78)

## நாளை

ஐப்பசி 14
செவ்வாய்க்கிழமை
31.10.2006
திதி : நவமி
காலை : 08.38
நட்சத்திரம் : அவிட்டம்
மாலை : 05.40
சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம் : 03.03 - 04.33

# திருமலையிலிருந்து எடுத்துவரப்பட்ட பார்சல்களில் பயறு முளைத்து, உருளைக்கிழங்கு அழுகிய நிலையில்!

## யாழ்.தபாலக வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.30

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட பார்சல்கள் சிதைவடைந்து, உடைந்த நிலையில் இருப்பதாக யாழ்.தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலை தபாலகத்தில் கையளிக்கப்பட்ட 700 தபால் பொதிகள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தன.

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட இப்பொதிகள் யாழ்.தபாலகத்துக்கு எடுத்துவரப்பட்டு உடனடியாகவே தரம்பிரிக்கப்பட்டன.

இதன்போது சுமார் 2 ஆயிரம் பார்சல்கள் அந்தப் பொதிகளில் இருந்தமையும் உணவுப் பொருள்களே அந்தப் பார்சலில் இருந்தமையும் தெரியவந்ததாகவும் கூறப்பட்டது.

குறிப்பாக, இவ்வாறு எடுத்துவரப்பட்ட பார்சல்கள் நனைந்து உடைந்த நிலையில் சிதைந்து காணப்பட்டன என்றும் -

பார்சலில் வந்த உருளைக்கிழங்கு போன்ற பொருள்கள் அழுகிய நிலையில் காணப்பட்டன என்றும் -

பயறு முளைத்த நிலையில் காணப்பட்டது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலான பார்சல்களில் முகவரிகள் கூட அழிந்து காணப்பட்டன.

பார்சல்களை என்ன செய்வது என்று தெரியாத நிலையில் தபாலக ஊழியர்கள் உள்ளனர் எனச் சொல்லப்படுகிறது. (1)

# கொம்மாந்துறை படைமுகாம் தளபதி துப்பாக்கிச் சண்டையில் உயிரிழப்பு

மட்டக்களப்பு,ஒக்.30

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலையில் கொம்மாந்துறை இராணுவ முகாமின் கட்டளைத் தளபதி பி.டி. விஜயதுங்க (வயது-42) சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகம் அருகே நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்களுடன் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் விஜயதுங்க கொல்லப்பட்டார்.

விடுமுறைக்காக சென்ற இராணுவத்தினருடன் இராணுவ வாகனத் தொட [illegible] பகுதியைக் கடந்த பின்னர் இம்மோதல் நடந்துள்ளது. தாக்குதல் நடத்தியோர் இராணுவ வாகனத் தொடரணியை இலக்கு வைத்திருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது.

இம்மோதலில் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு மருத்துவமனையில் விஜயதுங்க சேர்க்கப்பட்டார். ஆனால், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இதனிடையே ஏறாவூர் பண்ணைச் சோலை வீதியில் அடையாளம் தெரியாத நபர்கள் நேற்றுமுன்தினம் மாலை 6.15 மணியளவில் ஸ்ரீலங்கா பொலிஸ் அதிகாரி மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் பொலிஸ் அதிகாரியுடன் உடனிருந்த கான்ஸ்டபிள் படுகாயமடைந்தார். அவர் ஏறாவூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரி ஆசிரியை

செல்வி

### சுலோஜனா இராமச்சந்திரன்

அவர்கள் முதுமாணி (M.A. Tamil-மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்) பட்டம் பெற்றதையிட்டு உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி.

(54764)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

826 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கன்னி **14 15 24 34**

27-10-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5501194 - 5514602

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 276,848 | 10/- | 2,768,480/- |
| 2 இலக்கங்கள் | 25,358 | 20/- | 507,160/- |
| 1 இல. + லக்கினம் | 25,119 | 30/- | 753,570/- |
| 2 இல. + லக்கினம் | 2,347 | 100/- | 234,700/- |
| 3 இலக்கங்கள் | 688 | 500/- | 344,000/- |
| 3 இல. + லக்கினம் | 56 | 5,000/- | 280,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 6,187,910/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 330,425 | | 7,211,410/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல.4627033 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2006 ஒக்டோபர் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | 5502386-1-75 |
| மாத்தறை | 5503429-5-36 |
| மொனராகலை | 5509393-7-46 |
| குருநாகல் | 5512016-3-45 |
| புத்தளம் | 5502120-4-40 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 23 - 03 - 1936



இறப்பு 30 - 09 - 2006

### அமரர் நாகரட்ணம் சுந்தரலிங்கம்

மாதம் ஒன்று ஓடிமறைந்தாலும் - நீர்
இவ்வுலகில் இல்லையென்பதை நம்பவில்லை
பாரினில் பிறப்போ ரெல்லாம் - விண்
செல்வது நியதியாயினும்
மின்னாமல் முழங்காமல் மழைவருவதுபோல்
யாரும் நினையாதபோது நீர் சென்றதேன்?
எம் உயிர் உள்ளவரை - உம்
நினைவு மறையாது வாழ்வோம்.

நிகழும் விய வருஷம் புரட்டாதி மாதம் 30ஆம் திகதி இறையடி சேர்ந்த எமது தந்தையின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [30.10.2006] திங்கட்கிழமை நடைபெறவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மகாதனை,
தெல்லிப்பழை.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

(547767)

## தென்மராட்சி கிழக்கில் நேற்று ஊரடங்கு

யாழ்ப்பாணம், ஒக்.30

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் நேற்று ஊரடங்கு தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்பட்டதாக பலாலி படைத்தலைமையகம் அறிவித்துள்ளது.

வரணி, கொடிகாமம், கச்சாய், எழுதுமட்டுவாழ், நாவற்குடா, மீசாலை கிழக்கு, அல்லாரை, மறவன்புலோ, தனங்கிளப்பு ஆகிய இடங்களிலேயே இந்த ஊரடங்கு தொடர்ந்து நடைமுறையில் இருந்தது.

திடீரென ஊரடங்கு அமுல் அறிவிக்கப்பட்டதால் மக்கள் தமது அன்றாடக் கடமைகளை மேற்கொள்ள முடியாது வீடுகளுக்குள்ளேயே முடங்கிப்போயிருந்தனர். (1-203)

## மாதாந்தக் கருத்தரங்கு

கைதடி, ஒக்.30

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சகல பிரதேச செயலர் பிரிவுகளையும் சேர்ந்த சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான மாதாந்த கருத்தரங்கு எதிர்வரும் 3ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கைதடியிலுள்ள முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் குறிப்பிட்ட சகலரையும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட சமூக சேவை பதில் உத்தியோகத்தர் நா.ராஜலிங்கம் கேட்டுள்ளார். (202-75)

## A/L பௌதிகவியல்/இணைந்த கணிதம்

பிரபல கல்லூரிகளில் பல வருடங்கள் கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் மேற்படி பாடங்கள் ஏராளமான பயிற்சிகளுடன் (20 வருட வினாத்தாள்கள் உட்பட) 3000 இற்கும் மேற்பட்ட M.C.Q. விளக்கவிடைகளுடன் கற்பிக்கப்படுகிறது. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். முழுப்பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாக முடித்துக் கொடுக்கப்படும். சிறந்த பெறுபேறுகளைப்பெற

T.P.: 0776648751

ஆசிரியர்: R.பாலசுப்பிரமணியம்
B.Sc.(Cey) Dip-in-Ed.
42/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(53258)(21.19.17)

## 37ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 05 - 04 - 1939



மறைவு 24 - 09 - 2006

### அமரர் சின்னத்துரை அருந்தவநாதன் (J.P.)

எங்கள் உயர்வே உங்கள் மூச்சாய்
பாரினில் எமை ஏற்றம் பெற வைத்தீர்
அனைத்துக் கடமையும் இனிதே முடிந்ததென
காளியின் திருவடியில் கணத்தில் சேர்ந்தீர்
கண்ணீர்விழிகளுடன் என்றும் உங்கள் நினைவாக...

24.09.2006 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் 37ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 30.10.2006 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில்லும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:- மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்

## மரண அறிவித்தல்

### கந்தையா முத்துக்குமாரு

(இளைப்பாறிய ஆசிரியர், சரசாலை தெற்கு)

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா முத்துக்குமாரு நேற்று முன்தினம் (28.10.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பஞ்சவர்ணம் தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்ற வேதநாயகியின் அன்புக் கணவரும், சுந்தரேஸ்வரன் (லண்டன்), சதானந்தன் (மக்கள் வங்கி, கொழும்பு), சித்தானந்தன் (நீர்வள சபை, கொழும்பு) ஆகியோரின் தந்தையும் அமிர்தவல்லி, பொன்னம்மா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சறோஜினிதேவி, இந்திராதேவி, கௌரி (ஆசிரியர், இந்துக் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் மாமனும் சுதர்சினி - சைமன், நிசாந்தன், றோமேஸ்தன் - சேரா, சாம்பவி ஆகியோரின் பேரனும் கிறிஸ்தோப்பர், அனா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
[illegible] (பெறாமகன்),
சரசாலை தெற்கு.

தொ.பே. 0112365957
0112360534

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 19 * 11 * 1918



மறைவு 30 * 09 * 2006

### அமரர் சரவணமுத்து சிவசுப்பிரமணியம்

*பண்பின் இருப்பிடமாய்*
*பாசத்தின் ஒளிவிளக்காய்*
*நண்பருக்கு நட்பாய்*
*நமக்குத் தலைவனாய்*
*எம்மை விட்டு ஏன் அகன்றீர்?*
*எம்பெருமான் திருவடி சேர்ந்தீரோ!*

இன்று (30.10.2006) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எருப்பிட்டி,
பன்னாலை, தெல்லிப்பழை.

(54666)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 27.11.1933

மறைவு 30.09.2006

### திருமதி சரஸ்வதி அருட்பிரகாசம்

*"அன்புக்குரிய அன்னையாய் பாசத்தின் பிறப்பிடமாய்*
*குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்திட்ட எம் தாயே!*
*மாதம் ஒன்று கடந்திடினும் மாறாது எம் துயரம்*
*எத்தனை உறவுகள் இருந்தாலும் உங்கள் அன்புக்கு ஈடாகுமா?*
*அம்மா என்று நாம் அழைக்க நீங்கள் இல்லையே தாயே!*
*உங்கள் குடும்ப உறவுகள் உங்களை எண்ணி எண்ணி*
*ஏங்கித் தவிப்பது உங்களுக்குத் தெரியவில்லையா?*
*நீங்கள் எம்மை விட்டு மறைந்தாலும் எப்போதும்*
*எம்மோடு நினைவுப் பூக்களாய் மலர்ந்தே இருப்பீர்கள் அம்மா*
*காலச் சக்கரம் உருண்டோடினாலும் நீங்கள் எம்மோடு வாழ்ந்த காலங்கள் மாறாது.*

150, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். (54684)

கணவர், சகோதரி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வராணி துரைசிங்கம் (ராணியம்மா)



வழக்கம்பரை, சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி செல்வராணி துரைசிங்கம் (ராணியம்மா) 27.10.2006 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் ஆசிரியர் காசிப்பிள்ளை துரைசிங்கம் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்) அவர்களின் அன்பு மனைவியும் தனேசன் (டென்மார்க்), ரகு (உதவிப்பொது முகாமையாளர், மக்கள் வங்கி, கிழக்கு வலயம்), அசோகன் (டென்மார்க்) திருமதி சி.மாதினி (டென்மார்க்) குமார் (தலைமை அலுவலகம், இலங்கை வங்கி, கொழும்பு), பரதன் (ஜேர்மனி), திருமதி நீலரோகினி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், திருமதி த.வசந்தா, திருமதி ர.பத்மலோசினி (சிரேஷ்ட முகாமையாளர், தலைமை அலுவலகம், மக்கள் வங்கி, கொழும்பு), திருமதி அ.பாலா (டென்மார்க்), வே.சிவராசா (டென்மார்க்), திருமதி கு.சந்திரமலர் (இலங்கை வங்கி, கொழும்பு), திருமதி ராணி, பு.நிரஞ்சன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமை மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணிக்கு பூதவுடல் அவரின் இல்லத்தில் இருந்து வழுக்கையாறு இந்துமயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், வடக்கு - கிழக்கு மாகாண வங்கி ஊழியர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வழக்கம்பரை,
சுழிபுரம். (54774)

தகவல்:
துரைசிங்கம் ரகு (மகன்)
(உதவிப் பொது முகாமையாளர், மக்கள் வங்கி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் கட்ட உணவு விநியோகத்தை 6ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்யப்பணிப்பு

## களஞ்சியத்திலிருந்து பொருள் பெறாதது குறித்தும் அரச அதிபர் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஒக்.30

தற்சமயம் இடம்பெற்று வரும் ஐந்தாம் கட்ட உணவு விநியோகத்தை எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்யவேண்டும் என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கண்டிப்பான உத்தரவை விடுத்துள்ளார்.

ஐந்தாம் கட்ட விநியோகத்துக்கான பொருள்களைப் பெறுவதற்கான கட்டளைகளைப் பெற்ற ப.நோ.கூ.சங்கங்கள் இதுவரை களஞ்சியத்தில் பொருள்களைப் பெறாதமை குறித்து அதிருப்தி வெளியிட்ட அரச அதிபர்-

கட்டளைகளைப் பெற்றவர்கள் உடன் களஞ்சியத்திலிருந்து உணவுப் பொருள்களைப் பெற்று உரிய காலத்தில் மக்களுக்குப் பொருள்கள் சென்றடைவதை உறுதி செய்யவேண்டும் என்றும் -

யாழ்.செயலகத்தில் உள்ள விசேட கட்டளைகளை இன்று பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் - அறிவுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் 31ஆம் திகதிக்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் உணவுப்பொருள்கள் வழங்கப்படமாட்டாது என்றும் -

அதற்கு முன் உணவுப் பொருள்களைப் பெற்று எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன் உணவு விநியோகத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் - அரச அதிபர் சகல ப.நோ.கூ.சங்கங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

அதேவேளை -

நாலாம் கட்ட உணவு விநியோகத்தின் பின், எஞ்சியுள்ள அரிசி, மா, சீனி, பால்மா ஆகியவற்றின் விவரங்களை உடன் யாழ். செயலகத்துக்கு அனுப்புமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார். (1)

# சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு நாளை

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ்.மாவட்டத்தில் விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் தெரிவுசெய்யப்பட்ட நாற்பத்தொன்பது சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.பற்றிக்டிறஞ்சன், சுகாதாரத் திணைக்கள கால்நடை அபிவிருத்தி உதவிப்பணிப்பாளர் (வடக்கு) திருமதி.வ.அமிர்தலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விவசாயத்தில் ஈடுபடும் சிறந்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் கௌரவிக்கப்படவுள்ளன. (1-203)

# புனரமைக்கப்பட்ட வடிகால்களினுள் கழிவுகளைப் போடவேண்டாம்

## மாநகர ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.30

பருவ மழையை அடுத்து புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள வடிகால்களில் நீரோட்டத்தைத் தடைசெய்யும் வகையில் கழிவுப் பொருள்களைப் போடவேண்டாம் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ. சரவணபவ இந்த அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இது விடயமாக ஆணையாளர் விடுத்த செய்திக் குறிப்பில்:-

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் நீண்ட காலமாக திருத்தம் எதுவும் செய்யப்படாதிருந்த வடிகால்கள் அனைத்தும் மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன்னர் பெருந்தொகைப் பணச்செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

மழைகாலம் ஆரம்பமாகியுள்ள இக்கால கட்டத்தில் பொறுப்பற்ற விதத்தில் சிலர் கழிவுப்பொருள்களை குறிப்பாக மரக்கழிவுகளை வடிகாலுக்குள் போடுவதால் நீரோட்டம் தடைப்பட்டு, தேங்குவதால் நுளம்புப் பெருக்கமும் சுகாதார சீர்கேடும் ஏற்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாக எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனைத் தவிர்ப்பதற்கு வடிகால்களுக்குள் கழிவுகள் போடுவதைத் தவிர்க்குமாறும்-

கழிவுகளைச் சேகரித்து வைத்து மாநகர சபையின் கழிவகற்றும் வாகனங்களிடம் அவற்றை ஒப்படைக்குமாறும் -

கழிவுகளைக் கண்டபடி வடிகால்களுக்குள் போடுவதை அருகிலுள்ளவர்கள் கண்காணித்து அனைத்து வடிகால்களினூடாக மழைநீர் தடையின்றி ஓடக்கூடிய நிலையில் அவற்றைத் தொடர்ந்தும் பராமரிப்பதற்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று தயவாக கேட்டுக் கொள்கின்றேன்.-என்றுள்ளது.

# பொருள்களைக் கொள்வனவு செய்யும் போதே அவற்றின் நிறை, தரம் குறித்து உத்தரவாதம் பெறுக!

## 5ஆம் கட்ட நிவாரண விநியோகம் குறித்து அரச அதிபர் முன்னறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.30

ஐந்தாம் கட்ட நிவாரண விநியோகத்தின் போது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வழங்கப்படும் பொருள்களின் நிறை, தரம் குறித்து கொள்வனவு செய்யும் போதே உத்தரவாதம் செய்து கொள்ள வேண்டும்.

இப்படி பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ்.

நிவாரண விநியோகத்தில் மோசடிகள், குறைபாடுகள் இடம்பெறுவதாகக் கிடைக்கும் முறைப்பாடுகள் குறித்துக் கேட்ட போதே அரச அதிபர் இப்படிக் கூறினார்.

விநியோகிக்கப்படும் பொருள்களின் விவரங்களை சகல கிளைகளிலும் மக்களின் பார்வைக்கு வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளேன்.

அந்தப் பட்டியலின் பிரகாரம் பொருள்கள் வழங்கப்படுகின்றனவா?, அவற்றின் நிறை, தரம் என்பவற்றை அங்கேயே மக்கள் உத்தரவாதப்படுத்திக் கொள்ள வேண்டும் - என்று அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார். (1)

# அம்பாறை பாக்கியலவில் விடுதலைப் புலிகள் 2 பேர் பலி

கொழும்பு, ஒக்.30

அம்பாறை பாக்கியல காவல்துறைப் பிரிவில் உள்ள பதுளைச் சந்தியில் விசேட அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இருவர் பலியானதாக பாக்கியல காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது. தம்மைத் தாக்க வந்த விடுதலைப் புலிகள் மீதே தாம் தாக்குதல் மேற்கொண்டதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

# 85 மெற்றிக்தொன் கால்நடைத் தீவனம் ‘ஹின்ட்’ கப்பல் மூலம் குடாநாட்டுக்கு

யாழ்ப்பாணம், ஒக்.30

குடாநாட்டில் கால்நடைத் தீவனத்திற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்து 85 மெற்றிக்தொன் கால்நடைத் தீவனம் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளது.

‘ஹின்ட்’ என்ற கப்பலில் எடுத்துவரப்பட்ட கால்நடைத்தீவனங்களை இறக்கும் பணிகள் பருத்தித்துறை துறைமுகத்தில் நடைபெற்று வருககின்றன.

அத்துடன் விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் இக்கப்பலில் 1.8 மெற்றிக்தொன் விதையினங்களும் எடுத்துவரப்பட்டுள்ளன. அத்துடன் 800 மெற்றிக்தொன் உணவுப் பொருள்களும் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கான தீவனங்கள் கால்நடை வைத்திய அதிகாரி திணைக்களம் ஊடாகவும்- விதையினங்கள் விவசாயத் திணைக்களம் ஊடாகவும்-விநியோகம் செய்யப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-203)

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அநுராதபுரத்தில் நோயாளி பலி

கொழும்பு, ஒக்.30

அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகத்திற்கு இலக்காகிப் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 7.30 இற்கு இடம்பெற்றுள்ளது. நோயாளியைப் பார்வையிடுவதற்கென வந்த ஒருவரே இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. சம்பவத்தில் பலியானவர், காயமடைந்த நிலையில் வவுனியாவில் இருந்து அநுராதபுர வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தவராவார். நல்லையா சிங்கராசா (வயது - 38) என்ற நோயாளியே பலியாகியுள்ளார்.

# தரைப்போக்குவரத்து தடைப்பட்டிருப்பதால் யாழ்ப்பாணத்தில் மனிதாபிமான நெருக்கடி

## ஐரோப்பிய ஆணைக்குழுவின் தூதர் கவலை

யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப் போக்குவரத்து தடைப்பட்டிருப்பதால் அங்கு அவசர உதவிகளைக் கொண்டு செல்ல முடியாமல் இருக்கிறது. இந்த நிலைமை தொடருமாக இருந்தால் பெரும் மனிதாபிமான நெருக்கடி உருவாகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐரோப்பிய ஆணைக்குழுவின் தூதுவர் ஜூலியன் வில்சன்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடிகளைச் சீர்செய்வதற்காக ஐரோப்பிய ஆணைக்குழு 5 மில்லியன் யூரோ நிதி உதவியை வழங்க முன்வந்திருக்கிறது. இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பொதுமக்கள் எதிர்கொள்ளும் துயரங்களைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்தின் நிலைமை அதிக கவலையளிப்பதாகவுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு அவசியமாகத் தேவையாகவுள்ள பொருட்களைக் கொண்டுசெல்ல முடியாமலுள்ளது. அங்கு மனிதாபிமான அமைப்புகள் செல்வதே கடினமாகவுள்ளது.

யாழ்ப்பாண மக்களுக்குப் பெரும் தேவைகள் உள்ளன. அவற்றைப் பூர்த்தி செய்வது மிகக் கடினமாகவுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மனிதாபிமான அமைப்புகள் செல்வதற்கு அனுமதி வழங்குவதில் இரு தரப்பும் முக்கிய பங்களிப்பை வழங்க வேண்டும். ஜெனிவா பேச்சுகள் இந்த விடயத்தில் சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்கு வழிவகுக்கும் என்று நம்புகின்றோம்.

மிகத் திறமையாக பணியாற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் இலங்கையில் தமது பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனக் கருதுகின்றேன்.

அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் இருந்தால் அது என்னவென்று எங்களிடம் தெரியப்படுத்துங்கள். மூதூரில் அரச சார்பற்ற அமைப்பின் பணியாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பான விசாரணைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதை முழு உலகும் உன்னிப்பாக அவதானிக்கின்றது. மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்கின்ற அமைப்புகள் பாதுகாக்கப்பட வேண்டும். புதிய தவணைக்கான மனிதாபிமான உதவிகளை இலங்கைக்கு வழங்குகின்றோம்.

### மனிதாபிமான உதவிகள் புதிதாகத் தேவைப்படுகின்றன

ஐந்து மில்லியன் யூரோக்கள் வழங்கப்படுகின்றன. இலங்கையில் நிலைமை தற்போது மோசமடைந்துள்ளது. இதன் காரணமாக புதிதாக மனிதாபிமான உதவிகள் அவசியமாகவுள்ளன.

தமிழ் நாட்டிற்கும் பெருமளவு மக்கள் செல்லத் தொடங்கியுள்ளனர். ஐரோப்பிய ஆணைக்குழு எவ்வித பாரபட்சமுமின்றி, இன, மத, வேறுபாடின்றி இந்த உதவிகளை வழங்குகின்றது.

புதிதாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் எம்மைப்போல எதிர்காலக் கனவுகளைக் கொண்டவர்கள். அவர்களது கனவுகள் சிதைந்து போயுள்ளன. மனிதாபிமான பணிகளை மேற்கொள்வதற்கான அனுமதிகள் மறுக்கப்பட்டுள்ளன. கடந்த 35 வருடங்களாக இலங்கையில் பணியாற்றிவரும் அமைப்பு என்ற வகையில் கடந்த வருடத்திலிருந்து மனிதாபிமான செயற்பாட்டிற்கான இடம் குறைவடைந்து வருவதை உணர்கிறோம்.

மேலும், எமது சமூக அமைப்பு களின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளது. ஜனாதிபதி மனிதாபிமான அமைப்புகளின் பணியை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என உறுதியளித்தார். இது தொடர்பான முதலாவது கூட்டம் கடந்தவாரம் இடம்பெற்றது. எனினும், இந்த விடயத்தில் செய்துமுடிக்க பணிகள் இன்னமும் உள்ளன.

ஐரோப்பிய ஆணைக்குழுவின் மனிதாபிமான உதவித் திணைக்களம் மேலதிகமாக 5 மில்லியன் யூரோக்களை வழங்குகின்றது.

இலங்கையில் இடம்பெறும் மோதல்களால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்கான மனிதாபிமான உதவியாகவே இது வழங்கப்படுகிறது. 2005ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து இலங்கையில் பாதுகாப்பு நிலைவரம் மோசமடைந்துள்ளது. புதிதாக மோதல்கள் மூண்டுள்ளன; உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன.

### 2000ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு திரும்பிச் சென்றுவிட்டது

இலங்கை 2000ஆம் ஆண்டு காணப் [illegible] சென்றுவிட்டது. அக்காலப் பகுதியில் வருடமொன்றிற்கு 3,791 பேர் கொல்லப்பட்டுள்ளனர். குறிப்பாக புதிதாக மக்கள் இடம்பெயர்வதே கவலையளிக்கின்றது.

2006 ஏப்ரலுக்குப் பின்னர் 2 லட்சத்து 5 ஆயிரம் பேர் இலங்கையில் இடம்பெயர்ந்துள்ளனர். ஏற்கனவே, முன்னர் இடம்பெற்ற மோதல்களால் 3 லட்சத்து 20 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்த நிலையிலுள்ளனர். மேலும், கடல்கோளால் 2 லட்சம் முதல் 4 லட்சம் வரையிலான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் பலர் மீண்டும் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக இந்தியாவின் தமிழ்நாட்டிற்கு 15 ஆயிரம் புதிய அகதிகள் சென்றுள்ளனர். அங்குள்ள அகதி முகாம்களில் 80 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் உள்ளனர். இவர்கள் குடிதண்ணீர், சுகாதார மற்றும் தங்குமிட நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

வடக்கு-கிழக்கின் பல பகுதிகளுக்குச் செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மனிதாபி மான நோக்கத்துடன் முன்வைக்கப்பட்ட யோசனைகளும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஓகஸ்ட் 11ஆம் திகதியிலிருந்து யாழ்.குடாநாட்டுக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குமான வீதிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இதன் காரணமாக மோதலால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு அவசர உதவிகளை தரைமூலம் கொண்டுசெல்ல முடியாமலுள்ளது. தற்போதைய தட்டுப்பாடு தொடர்ந்தால் பாரிய மனிதாபிமான நெருக்கடி உருவாகும் - என்று அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு முனையில் துருப்புகள் குவிப்பு
# பலாலி அருகே இராணுவப் பயிற்சி

கொழும்பு,ஒக்.30

வடக்கில் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைப்பகுதியில் பெருமளவு துருப்புகளும் தளபாடங்களும் நகர்த்தப்பட்டுள்ளன என்றும், முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளை அண்டிய கிராமங்களில் ஞாயிறு காலை முதல் ஊரடங்கு உத்தரவு அமுலுக்கு கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் 'தமிழ் நெற்' இணையத்தளம் நேற்றுத் தகவல் வெளியிட்டது.

சனிக்கிழமை இரவு முழுவதும் பலாலித் தளத்தை அண்டிய பிரதேசங்களில் படையினர் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

பலாலி, தொண்டைமனாறு மற்றும் வளலாய் பிரதேசங்களில் சனிக்கிழமை இரவிரவாக படையினரின் இந்தப் பயிற்சி நீடித்தது.

இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா சனிக்கிழமை பலாலி படைத்தளத்துக்கு விஜயம் செய்து அங்கு குடாநாட்டின் படைத்தளபதிகளோடு பேச்சு நடத்தியதைத் தொடர்ந்தே படையினரின் இந்தப் பயிற்சி ஒத்திகை பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்டது - என்று 'தமிழ்நெற்' செய்திதெரிவித்தது.

படை உயர் அதிகாரிகளுடன் சனிக்கிழமை வடக்கே விஜயம் செய்த இராணுவத்தளபதி சரத் பொன்சேகா, பலாலியில் யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி மற்றும் 51, 52, 53 மற்றும் 55ஆவது படைப்பிரிவுகளின் தளபதிகளோடு கூட்டம் ஒன்றை நடத்தினார் என்பது அறிந்ததே.

முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளை அண்டிய வரணி, உசன், கச்சாய், நாவற்காடு, எழுதுமட்டுவாள், கொடிகாமம், மீசாலை கிழக்கு, அல்லாரை, தனங்கிளப்பு உட்பட தென்மராட்சிப் பகுதியில் உள்ளூர் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுவதாக நேற்றுக்காலை முதல் 'யாழ்.எவ்.எம்.' வானொலிச் சேவை ஊடாக அறிவிப்பு விடுக்கப்பட்டது.

ஊரடங்குச் சட்டம் இன்று காலை தளர்த்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திடீரென பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கினால் தென்மராட்சி கிழக்கு மக்களின் அன்றாடப் பணிகள் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் படைநடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படுவதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் நேற்றுப் பிற்பகல் வரை தகவல் எதனையும் வெளியிடவில்லை. (ஐ-3)

### தீவகத்தில் பலத்த காற்றால் காவலரண்கள் தூக்கி வீசப்பட்டன

யாழ்ப்பாணம்,ஒக்.30

தீவகத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் திடீரென வீசிய கடுங்காற்றால் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

குறிகாட்டுவான், நயினாதீவு ஆகிய இறங்குதுறைகளில் அமைந்திருந்த கடற்படையினரின் காவலரண்கள் இதனால் தூக்கி வீசப்பட்டன. அப்பகுதியில் காணப்பட்ட கற்குவியல்கள் துறைமுகத்தின் நடைபாதையில் வீசப்பட்டுக் கிடந்தன.

காவலரண்களில் இருந்த படையினர் தப்பி ஓடியதால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நயினாதீவில் கரையோரம் அமைந்திருந்த சில கோயில்கள் மற்றும் பள்ளிவாசல் என்பவற்றின் ஓடுகளும் தூக்கி வீசப்பட்டன.

# பேச்சு வேளையில் அரசுப் படைகள் தாக்கினால் பாரதூரமான விளைவு ஏற்படும் என எச்சரிக்கை

## ஜெனிவாவில் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவிப்பு



ஜெனிவா,ஒக். 30

வடக்கில் அரசுப் படைகள் வலிந்து தாக்கும் போர் நடவடிக்கைகளுக்கான ஆயத்தங்களிலும், ஒத்திகைகளிலும் ஈடுபட்டிருக்கின்றன என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜெனிவாவில் தரப்புகள் இரண்டும் சமாதனப் பேச்சுகளில் ஈடுபட்டிருக்கும் சமயத்தில் அரசுப்படைகள் இவ்வாறான வலிந்த தாக்குதல்களை மேற்கொள்ளத் தயாராகி வருகின்றன என்று ஜெனிவாவில் இளந்திரையன் செய்தியாளர்களிடம் நேற்றுக் காலை தெரிவித்தார்.

இரண்டாம் நாள் பேச்சுக்காக ஜெனிவா சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்கு நேற்றுக்காலை புலிகளின் பிரதிநிதிகள் குழு வருகை தந்தவேளை அங்கு காணப்பட்ட ஊடகவியலாளர்களிடம் இளந்திரையன் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுவினர் நாட்டுக்கு வெளியே சென்றிருக்கும் சமயத்தில் அரசுப் படைகள் வலிந்த தாக்குதல் எதனையும் மேற்கொண்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்றும் இளந்திரையன் எச்சரித்தார்.

அதிகரித்துவரும் இராணுவத்தாக்குதல்களையும் கட்டுமீறிப்போயிருக்கும் மனித உரிமை மீறல்களையும் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்கான முயற்சியில் பேச்சுக் குழுக்கள் ஈடுபட்டிருக்கும் சமயத்தில், அரசுப்படைகள் யாழ்ப்பாணத்தில் மக்களின் வாழ்வை மேலும் அவலத்துக்குட்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது ஸ்ரீலங்கா அரசின் இராணுவ நிகழ்ச்சித் திட்டத்தையே மீண்டும் வெளிப்படுத்துகின்றது - என்றும் புலிகளின் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார். (

# யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் பயணிகள் விமான சேவை

## நவம்பர் 3 ஆம் திகதி தொடக்கம் வாரத்தில் இரு தடவைகள்

யாழ்ப்பாணம், ஒக்.30

குடாநாட்டுக்கான பயணிகள் விமான சேவையை மீண்டும் நவம்பர் 3ஆம் திகதி முதல் ஆரம்பிக்க உள்ளதாக 'எக்ஸ்போ' விமானசேவை நிறுவனம் தெரிவித்திருக்கின்றது.

நவம்பர் மூன்றாம் திகதி தொடக்கம் வாரத்தில் இரண்டு தடவை பலாலி - இரத் மலானை இடையே விமானசேவைகள் இடம்பெறும் என்று அந்த நிறுவனம் அறிவித் திருக்கின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து பயணம் செய்வோர் இராணுவ சிவில் நிர்வாக அலுவலகத்தில் முதலில் படிவங்களைப் பெற்று அவற்றைப் பூரணப்படுத்தி தாம் வசிக்கும் பிரிவுக்குரிய பிரிகேட் படை அலுவலகங்களில் அனுமதிபெற்றே பயணத்தை மேற் கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதி முகமாலையில் மோதல் வெடித்தது முதல் குடாநாட்டுக்கான பயணிகள் விமான சேவை தடைப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ-1)

## கண்ணீர் அஞ்சலி



*மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளரும் கிழக்கு வலயத்தின் தற்போதைய உதவிப் பொது முகாமையாளருமான* **துரைசிங்கம் ரகு அவர்களின் தாய்**

**திருமதி துரைசிங்கம் செல்வராணி**

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் நாமும் துயரைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

*மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலக நலன்புரிச் சங்க ஊழியர்கள், பிரதேச தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம்.*

## கண்ணீர் அஞ்சலி

28.10.2006 அன்று இறைபதமெய்திய எமது பாதுகாப்பு நலன்புரிச் சங்க பொருளாளரும், பாதுகாப்பு உத்தியோகத்தர் **கந்தையா அருளானந்தம்** அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி மகேஸ்வரி கந்தையா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது பாதுகாப்பு நலன்புரிச்சங்கம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாதுகாப்பு நலன்புரிச் சங்கம், பாதுகாப்புப் பகுதி, யாழ். பல்கலைக்கழகம்.

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை தனபாலசிங்கம்

**(கார் மெக்கானிக் - ஞானதேவன் கராஜ்)**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தனபாலசிங்கம் இந்தியாவில் 29.10.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜீவகுமார் (லண்டன்), தேவகுமார் (பிரான்ஸ்), ஜெயராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இந்தியாவில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*21/2 பெருமாள் கோயில் தெற்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.* (54779)

*தகவல்: சி.பஞ்சலிங்கம் (தம்பி)*

## சைவப்புலவர் பட்டம் பெறுவோர் விவரம்

வலி.தென் மேற்கு, ஒக்.30

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்திய 2006 ஆம் ஆண்டுக்கான சைவப் புலவர் பட்டப் பரீட்சைகளில் சித்தி அடைந்தவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

செல்வி சறோஜினிதேவி தம்பிராசா- (வைமன் வீதி, நல்லூர்), கணபதிப்பிள்ளை கஜரூபன்- (கரம்பகம், மிருசுவில்), செல்வி ஜெயசித்திரா ஜெயசிங்கம்- (வேம்படி, காரை நகர்), திருமதி மதிவதனி முருகன் (மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்), செல்வி சியாமினி இராசரத்தினம் -(முத்துமாரி அம்மன் கோவிலடி, அச்சுவேலி), சண்முகராசா சிறிகாந்தன் (நாலவர் வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரே சைவப் புலவர் பட்டப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாவர்.

இதற்கிடையில்- இளம் சைவப்புலவர் பரீட்சையில் கமலநாதன் கைலைவாசன் (மிருசுவில் வடக்கு, மிருசுவில்) என்பவர் சித்தியடைந்ததாக சைவப்புலவர் சங்கத்தின் தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் சு. செல்லத்துரை தெரிவித்தார். (135)

## உடுவிலில் இன்று கமக்காரர் வங்கி திறப்பு

வலி.தென் மேற்கு, ஒக்.30

உடுவில் கம நல சேவை நிலையத்தில் இன்று காலை 9.30 மணிக்கு கமக்காரர் வங்கி திறந்து வைக்கப்படவுள்ளது.

உடுவில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் செ.சோதிநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் உட்பட மற்றும் பலர் கலந்து கொள்வார்கள். பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயி கள் சம்மேளனங்களின் [illegible] யோர் இதில் கலந்து கொள்வர். (135)


**படிவம்**

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் அனுமதிக்கான விண்ணப்பப் படிவம் 2006,2007

உயர் தொழில்நுட்பக் கல்லூரிக்கான விண்ணப்பப்படிவம்.

கனடா, ஆஸ்திரேலியா ஆகியவற்றுக்கான விசாவுக்கான விண்ணப்பப்படிவம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை, [illegible]

[illegible] சந்தி, யாழ்.


## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்

**(நீதிமன்ற உத்தியோகத்தர், யாழ். மாவட்ட நீதிமன்றம்)**



மாதகலைப் பிறப்பிடமாகவும் தற்போது நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (29.10.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை (C.T.B நவரத்தினம்) - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் தவசர்- வல்லிபுரம் (முன்னாள் சாரதி-C.T.B) -லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தாவின் அன்புக் கணவரும் துஷ்யந்தன் (லண்டன்), டயானா ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராஜேஸ்வரி (மலேசியா), இராசேந்திரம் (சேனாதி, சங்கானை), இந்திராணி (மாதகல்), புஸ்பராணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற தரும குலசிங்கம், குணசிங்கம் (கனடா), சத்தியபாமா (கனடா), விஜயகுமாரி (நல்லூர்), ஜீவகன் (கனடா), காலஞ்சென்ற தில்லைநடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திராணி (கொழும்பு), சந்திரவதனா (கொழும்பு), விஜியா (கனடா), சியாமளா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*221, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர்.* (54785)

*தகவல்: குடும்பத்தினர்.*

### திருமதி கனகரத்தினம் இராசம்மா



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி தெற்கு, பலாலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் இராசம்மா நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் அமரர்கள் இராமுப்பிள்ளை - கற்பகம் தம்பதியரின் மகளும் அமரர்கள் விஸ்வநாதர் - சேதுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் (இரத்தினம்) அன்பு மனைவியும் நகுனகுலசிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், யாழ்.மாநகரசபை ), சந்திரதேவி (கனடா), சந்திரகுமாரி (ஜேர்மனி), சந்திரவதனா(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் புஸ்பராணி (ஓய்வுபெற்ற புடைவைக் கைத்தொழில் மேற்பார்வையாளர் - உடுவில்), சற்குணாநந்தன்(கனடா), தம்பிரட்ணம் (ஜேர்மனி), கந்தசாமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் கமலவேணி, நித்தனன், சிவாங்கதன், ஐங்கதன், கார்த்தியாயினி, நிவேதா, லாவண்யா, உமாங்கதன், கீர்த்தனன் மற்றும் விநோவிந்தன் (வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் விகாஷினின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2006) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 12.30 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ரட்ணம் அவனியூ' 297, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு.* C-51235

*தகவல்: ந.நகுலகுலசிங்கம் (மகன்), ந.நர்த்தனன் (பேரன்).*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்த நீதிமன்றத் தீர்ப்பு புதுடில்லியின் வெளியுறவுக் கொள்கைக்கு சவால்!

## 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை கூறுகிறது

கொழும்பு, ஒக். 30

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி 1987இல் இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒரு மாகாணமாக இணைக்கப்பட்டமை சட்டவிரோதமானது என்று இலங்கை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியமையானது புதுடில்லியின் வெளிநாட்டுக் கொள்கைக்குச் சவாலாக அமைந் துள்ளது என 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

1987இல் செய்துகொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒரு மாகாணமாக இணைக்கப்பட்டன இவ்விணைப்பு சட்டவிரோதமானது என இலங்கையின் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இத்தீர்ப்பின் மூலம் வடக்கு- கிழக்கு மாகாணம் தமிழ்ப் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடம் என்பதை உயர்நீதிமன்றம் நிராகரித் துள்ளது.

இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவும், அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக இவ்விணைப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்கு மாகாணம் தனி நாடாக பிரியவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் விரும்பியதால் அம்மாகாணங்கள் தனிமாகாணமாக உருவாவதை சிங்களவர்களில் பெரும்பாலானோர் விரும்பவில்லை. இவ்விணைப்புத் தொடர்பாக இவ்வாறானவர்களின் ஆதரவைப் பெறவேண்டிய நிலை ஜயவர்தனவுக்கு அப்போது ஏற்பட்டது.

ஆகையால், இணைக்கப்படும் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்து நிரந்தரமாக ஒரு மாகாணமாக இருக்கவேண்டுமா அல்லது பிரிய வேண்டுமா என்று கிழக்கு மக்கள் ஒரு வருடத்தின்பின் தீர்மானிப்பதற்கு ஏதுவாக இம்மாகாணம் இணைக்கப்பட்டு கிழக்கு மக்களின் விருப்பத்தை அறிய ஒருவருடத்தின்பின் சர்வசன வாக்கெடுப்பு ஒன்று இடம்பெறவேண்டும் என்றொரு வாசகத்தை அந்த ஒப்பந்தத்தில் சேர்த்தார் ஜயவர்தன.

அதேநேரம் ராஜீவ்காந்தி, வடக்கு - கிழக்கு நிரந்தரமானது என்றும், சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறாது என்றும் தமிழ் மக்களுக்கு வாக்குறுதியளித்தார்.

ஆனால், வடக்கு - கிழக்கு இணைப்பு நிரந்தரமானது என்று அறிவிக்கப்படுவதற்கு முன்பு புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் என்றொரு நிபந்தனையை மாகாண சபைகள் சட்டத்தில் ஜயவர்தன இணைத்தார். ஆனால், புலிகள் அந்த நிபந்தனைக்கு இணங்கி ஆயுதங்களைக் கீழே வைக்கவில்லை.

இந்த இணைப்புக்கு எதிராக உயர்நீதிமன்ற ஆலோசனையைப் பெறச்சென்ற மாக்ஷீசவாதிகளான ஜே.வி.பியினர் இந்த ஆயுதங்களைவு நிபந்தனைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர்.

உத்தேசிக்கப்பட்ட தனியான மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தாதவரை அம்மாகாணத்திற்கு ஆளுநர் ஒருவரை நியமிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் முடியும்.

இதனை லாபகமாகப் பயன்படுத்த நினைக்கும் ஜே.வி.பியினர் கிழக்கில் உடனடியாகத் தேர்தலை நடத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். அது நடந்தால் வடக்கு - கிழக்கு இணைப்பு சாத்தியமற்றதாகிவிடும்.

வடக்கு - கிழக்கைத் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ இணைப்பதற்கான மாகாணசபைகள் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றம் சென்றாலும், இந்த விடயத்தில் தலையிட மீண்டும் உயர்நீதிமன்றத்திற்கு அழைப்புவிடுக்கப்படமுடியும்.

பல தசாப்தங்களாக அவ்வப்போது ஆட்சிக்கு வந்த அரசுகளின் ஆதரவுடன் கிழக்கில் சிங்களவர்கள் தமிழர்களின் விகிதாசாரத்தைக் குறைத்து கிழக்கைத் தங்களது சொந்த வீடாக மாற்றியிருக்கிறார்கள்.

வடக்கில் தமிழரின் சனத்தொகை மிகவும் உச்சத்தில் உள்ளநிலையில், புலி அமைப்பின் காரணமாக கிழக்கில் அவர்களின் விகிதாசாரப் பகிர்வு கீழிறங்கிவிட்டது.

அதேநேரம், வடக்கு - கிழக்கு இணைப்புக் காலத்தில் இருந்த நிபந்தனைகள் இனி இராது.

வடக்கு - கிழக்குத் தமிழ்ப்பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடமாகப் பார்க்கப்பட்ட வேளையில், 1990ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றிவிட்டனர்.

கிழக்கில் புலிகளுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான உறவு கசந்துவிட்டது. தற்போதைய உண்மை என்னவென்றால், கிழக்கில் குடியேறிய சிங்களவர்களை யார் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் விரட்டமுடியாது என்பதுதான்.

எந்தவகையிலேனும் புலிகள் வடக்கு - கிழக்கின் பெரும்பகுதியை அவர்களது கட்டுப்பாட்டின்கீழ் வைத்துள்ளனர். இருப்பினும், நீதிமன்றத் தீர்ப்பையிட்டு இலங்கையில் உள்ள அதிகமான தமிழர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். இத்தீர்ப்பின் பின்னணியில் அரசு உள்ளதோ என்று பலர் சந்தேகிக்கின்றனர் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-07)

## மூன்று வைத்தியசாலைகளுக்கு குடும்பநல உத்தியோகத்தர்கள்

வலி.தென்மேற்கு, ஒக்.30

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள வைத்தியசாலைகளுக்கு குடும்பநல உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை, மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றுக்கே குடும்பநல உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பண்டத்தரிப்பு வைத்தியசாலைக்கு திருமதி புஸ்பராகம் இராதாகிருஷ்ணனும், வட்டுக்கோட்டை வைத்தியசாலைக்கு திருமதி தனநாயகி புண்ணியமூர்த்தியும் மானிப்பாய் வைத்தியசாலைக்கு திருமதி சந்திரமதி கணபதிப்பிள்ளையும் குடும்பநல உத்தியோகத்தர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (203-135)

## புத்தூரில் நாளை சேவைநயப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.30

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அதிபர் வ.ஆறுமுகத்தின் சேவை நயப்பு வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட மாணவ முதல்வர் ஸ்ரீ வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதலில் அதிபர் தம்பதியர் கல்லூரி வாயிலிருந்து மண்டபத்திற்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

தொடர்ந்து வரவேற்புரையை கல்லூரியின் உயர்தர மாணவர் மன்ற செயலாளர் த. சிந்துஜனும் தொடக்க உரையை பிரதி அதிபர் கு.வாகீசனும் நிகழ்த்துவர். தொடர்ந்து வாழ்த்துரைகள், கௌரவிப்பு, ஏற்புரை, கலை நிகழ்வுகள் என்பன இடம் பெறும். (203-1)

# இரு தேசங்கள் இடையிலான பிரச்சினை இதனை கொழும்பு உணர்ந்தால்தான் தீர்வு

## நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி



கொழும்பு, ஒக். 30

இலங்கை இனப்பிரச்சினையானது இரு தேசங்களுக்கு இடையேயான பிரச்சினை என்பதை சிறிலங்கா புரிந்துகொண்டால்தான் தீர்வை எட்டமுடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் தமிழர் பிரதிநிதிகள் குழுவைச் சந்தித்த பின்னர் தமிழ்நெட் இணையத்தளத்துக்கு அவர் அளித்த செவ்வியிலே தெரிவித்ததாவது:-

தமிழர்கள் சிறுபான்மையினர் இல்லை. சிறிலங்காவின் ஒற்றையாட்சி அரசியலமைப்பானது தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்குரியது அல்ல.

அமைதிப் பேச்சுக்களுக்கு காலவரையறை நிர்ணயம் செய்யவேண்டும் என்று தமிழர் பிரதிநிதிகளை சிறிலங்கா அரசாங்கம் கோருவதற்கு முன்பாக அமைதி முயற்சிகளில் தனது ஈடுபாட்டை அது வெளிப்படுத்த வேண்டும்.

இனப்பிரச்சினையானது இருநாடுகளுக்கு இடையேயானது. சிங்கள் மற்றும் தமிழ் நாடுகளுக்கு என்பதை கொழும்பு புரிந்துகொண்டால்தான் தீர்வை அடையமுடியும்.

இங்கிலாந்திடமிருந்து இந்தத் தீவு விடுதலைபெற்றகாலம் தொடக்கம் தமிழர் தலைவர்களுடன் செய்து கொண்ட பல ஒப்பந்தங்களை தென்னிலங்கைத் தலைமை கைவிட்டுள்ளது. சிங்களத் தலைமையிடம் அதிகாரத்தை ஒப்படைத்ததன் மூலம் இந்தத் தீவில் தமிழர்கள் அரசியல் ரீதியாக நிரந்தரமாக சிறுபான்மையினராக்கப்பட்டுள்ளனர். இதர இனங்களுக்காக அடிப்படையான விடயங்கள் கூட சிறிலங்காவின் அரசியல்யாப்பில் உருவாக்கப்படவில்லை என்பதுதான் வரலாறு.

தீர்வு குறித்து எப்போதெல்லாம் சிங்களத் தலைவர்கள் பேசுகிறார்களோ அப்போதெல்லாம் இந்தியா மற்றும் சர்வதேச சமூகத்திடம் போலியாக வெளிப்படுத்துகின்றனர்.

மாகாண சபைகள், மாவட்ட அபிவிருத்தி சபைகள் என்றெல்லாம் முன்வைக்கப்பட்ட அனைத்துக் கட்சி மாநாடுகள், வட்ட மேசை மாநாடுகள் நிறையவை பார்த்துவிட்டோம்.

ஐக்கிய அரசியல் அமைப்பு, சமூகப் பன்முகமாகியவை இந்தியக் கூட்டமைப்பில் வெற்றிகரமானவையாக உள்ளன. எந்த ஒரு பெரும்பான்மைச் சமூகமும் இந்தியாவில் மற்றவர்களை ஆதிக்கம் செலுத்தவில்லை. இந்துப் பெரும்பான்மைச் சமூகமாக இருந்தாலும் மதச்சார்பற்ற நாடாக உள்ளது. அங்கே சீக்கியர்தான் இப்போது பிரதமராக உள்ளார். ஆனால் சிறிலங்காவில் பெரும்பான்மைச் சமூகம் இதர இனங்களுடன் அதிகாரப்பகிர்வுக்கு, தேச வளங்கள் பகிர்வுக்குத் தயாராக இல்லை.

தமிழ்த் தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில்தான் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். ஐரோப்பிய ஒன்றியத் தடைக்குப் பின்னர் அமைதிப் பேச்சுக்கள் மீதான நம்பிக்கை தமிழர்களுக்கு இல்லை.

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு, யுத்த நிறுத்த ஒப்பந்தம் மற்றும் 18 ஆண்டுகால இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை சீர்குலைத்தல் என சிங்களப் பேரினவாதம் தலைதூக்கியுள்ளது - என்றார் அவர். (ஐ)

## இலத்திரனியல் பொருள்களுடன் இருவர் கைது

கொழும்பு, ஒக். 30

சிங்கப்பூரிலிருந்துகொண்டு வரப்பட்ட - சுமார் 2 கோடி பெறுமதியான - கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் ஆகியவற்றைக் கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகள் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

இப்பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட பொருட்களில் வீடியோ கமராக்கள்,கையடக்கத் தொலைபேசிகள் என்பன அடங்குகின்றன - என்று சுங்க அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ)

# மஹிந்தவின் பெயரில் விமான சேவை நிறுவனம்

## அடுத்த வருடம் ஆரம்பிக்க முடிவு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெயரில் புதிய விமானசேவை நிறுவனத்தைத் தொடங்க அரசு முடிவுசெய்துள்ளது.

எதிர்வரும் நவம்பரில் தாக்கல் செய்யப்படவுள்ள வரவு - செலவுத் திட்ட அறிக்கையில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா ஏயார்லைன்ஸ் விமான சேவையை நிர்வகித்துவரும் எமிரேட்ஸ் மூலமாக புதிய விமான சேவை நிறுவனத்தை இயக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மஹிந்தவுக்கும் எமிரேட்ஸுக்கும் இடையே இது தொடர்பான பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. 2008ஆம் ஆண்டுடன் எமிரேட்ஸ் நிர்வாகத்துடனான லங்கா எயார்லைன்ஸ் ஒப்பந்தம் முடிவடையும் நிலையில் புதிய பேச்சுகளின் கீழ் மஹிந்தவின் பெயரிலான நிறுவன நிர்வாகம் ஒப்படைக்கப்படும்.

இருப்பினும், விமானத்துறை சபையிடம் இது தொடர்பில் விண்ணப்பம் எதுவும் தாக்கல்செய்யப்படவில்லை. விரைவில் இதற்கான விண்ணப்பம் தாக்கல் செய்யப்படக்கூடும் என்று தெரிகிறது. இந்நிறுவனத்தின் பங்குதாரர்களாக உள்நாடு மற்றும் சுவிஸ் போக்குவரத்துத் துறையினர் பங்கேற்கவுள்ளனர்.

புதிய நிறுவனத்துக்கு 'மிகின்' அல்லது 'மிகுந்து' என்று பெயர் சூட்டப்பட உள்ளது. மஹிந்தவின் வடமொழிப் பெயரும், புனைபெயரும் இதுவாகும்.

இந்நிறுவனப் பணிக்காக ஓய்வுபெற்ற ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் நிறுவன அதிகாரிகள் தெரிவுசெய்யப்பட்டு கொழும்பு உலக வர்த்தக மையத்தில் முதல் நிலைப் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன என்றும் தெரிகிறது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் புதிய நிறுவனத்தைச் செயற்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. (த)

# மழையினால் இதுவரை 16 பேர் மரணம் 68 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்வு

கொழும்பு, ஒக்.30

நாடு முழுவதும் கடந்த சில நாள்களாக பெய்துவரும் கடுமையான மழையின் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 16 ஆக உயர்ந்திருக்கிறது. இதுவரை 68 ஆயிரம் பேர் தமது இருப்பிடங்களிலிருந்து இடம்பெயர்ந்திருக்கின்றனர். இந்த மழையினால் நாட்டின் பல பகுதிகள் நீரில் மூழ்கியிருக்கின்றன.

புத்தளம், கம்பஹா, ஜா-எல, வத்தளை, கட்டான போன்ற பகுதிகளில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால். அந்தப் பகுதி மக்களின் அன்றாடப் பணிகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டன. கம்பஹா நகரில் வெள்ளம் வாரடித்துப் பாய்ந்து ஓடுகிறது. அங்கு மட்டும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்விடங்களை இழந்தன.

காலி, மாத்தறைப் பகுதிகளிலும் வீதிகளை மேவி வெள்ளம் பாய்வதால் அங்கு போக்குவரத்து முழுமையாக முடங்கியிருக்கிறது.

கொழும்பு - கட்டுநாயக்கா வீதியிலும் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இதனால் அந்த வீதி ஊடான போக்குவரத்து வேறு மார்க்கங்கள் ஊடாக திருப்பப்பட்டது.

இதேவேளை - களுத்துறை தெற்குப் பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு ஒன்றில் ஒரு வீடு பலத்த சேதம் அடைந்தது. எனினும், அதில் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை. (த)

# வடக்கு - கிழக்குக்கு நிதி ஒதுக்கீடு தனித்தனியாகவா? ஒன்றாகவா?

## இன்னும் முடிவில்லை என்கிறார் பிரதி நிதி அமைச்சர்

கொழும்பு, ஒக். 30

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் குறித்து இதுவரை எதுவித தீர்மானமும் எடுக்கவில்லையென அரசு தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு சட்டவிரோதமானது என இலங்கையின் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து அந்த மாகாணங்களுக்கு வரவு - செலவுத் திட்ட ஒக்கீடுகள் தனித்தனியாக மேற்கொள்ளப்படவேண்டுமென ஜே.வி.பி. கூறியிருந்தது.

இது குறித்து தற்போது தீர்மானமான முடிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லையென பிரதிநிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய தெரிவித்தார். (ஐ)

## சமாதானம் வேண்டி வெள்ளியில் பிரார்த்திக்குமாறு கோரிக்கை

ஐப்பசி வெள்ளிக்கிழமைதோறும் நிரந்தர சமாதானம் வேண்டி பிரார்த்திக்குமாறு இந்து அரச ஊழியர்கள் இணையம் கேட்டுள்ளது. சைவமக்களின் நலன் கருதி வெள்ளிக்கிழமைகளை அரச விடுமுறையாக மாற்றி அந்நாளுக்கான கடமைகளை சனி அல்லது ஞாயிறு தினங்களுக்கு மாற்றம் செய்து தரவேண்டும் என்று இந்து அரச ஊழியர் இணையம் மேலும் கேட்டுள்ளது. (1-203)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா-2 பேச்சின் முக்கிய பதிவுகள்...




நேற்று பேச்சு நடைபெற்ற மாநாட்டு மண்டபத்தின் முன்பாக காவலில் ஈடு பட்ட பொலிஸார்...









ஜெனிவாவில் நேற்று நடைபெற்ற அரசுப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையிலான 2 ஆம் நாள் பேச்சுக்களின் முக்கிய நிகழ்வுகளை மேலுள்ள படங்களில் காணலாம்.

## வந்தாறுமூலையில் துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு மற்றுமிருவர் காயம்

மட்டக்களப்பு, ஒக்.30

மட்டக்களப்பு வந்தாறு மூலையில் நேற்று காலை 7 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் மற்றும் இருவர் படுகாயமடைந்தனர்.

எஸ். கோவிந்தன் (வயது -16) என்பரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிந்தவராவார். ரமேஸ் (வயது -14), கிசோர் (வயது -15) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் மூவரும் கடந்த 13 ஆம் திகதி மட்டக்களப்பு மாங்காடு பகுதியில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்குழுவினர் திட்டமிட்டிருந்த னர்.

எனினும் -

ஜெனிவாப் பேச்சுக்களில் எவ்வித முன்னேற்றமும் இன்றித் தோல்வியில் முடிவடைந்ததால் -

ஏற்கனவே திட்டமிட்டவாறு நோர்வேக்குச் செல்லாமல் உடனடியாகவே தாயகம் திரும்புவதற்கு இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(அ-உ)

## வந்தாறுமூலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது-13) மற்றும் ஒரு வயதுக் குழந்தையான யதுர்சன் ஆகியோரேபடுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.


கட்டணம் - 200/= மட்டுமே

C.B Computer Academy

Station Road, Kondavil. T.P No. 021-4590291


## உடுப்பிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிங்கம் சிவானந்தன்(வயது 17 - கரணவாய்) ஆகியோரே இந்தச் சம்பவத்தில் சிக்கி உயிரிழந்தவர்களாவர்.

கிளைமோர் குண்டினை எடுத்துவந்ததாகக் குறிப்பிடப்படும் நபரின் சடலம் அடையாளம் காணப்படவில்லை. அவர் செலுத்தி வந்ததாகச் சந்தேகிக்கப்படும் சைக்கிள் பலத்த சேதமடைந்த நிலையில் அப் பகுதியில் காணப்பட்டது.

இதற்கிடையில் -

சம்பவத்தில் சிக்கி படுகாயமடைந்ததாகத் தெரிவித்து சமரபாகு பகுதியைச் சேர்ந்த கந்தையா சந்திரபாலன்(வயது -22) என்பவர் பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையிலும் -

உடுப்பிட்டி சேச்லேன் பகுதியைச் சேர்ந்த திரவியம் செல்வின் குறோஸ் (வயது 26) என்பவர் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு விஜயம் செய்த பருத்தித்துறை மாவட்ட நீதிவான் விசாரணைகளை நடத்தினார். உயிரிழந்தவர்களில் அடையாளம் காணப்பட்ட 5 பேரின் சடலங்களை பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் -

அடையாளம் காணப்படாத நபரின் சடலத்தை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு - உத்தரவு பிறப்பித்தார்.

இதற்கிடையில் - சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சமீபமாகவுள்ள பற்றை ஒன்றினுள் இருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவித்து இரண்டு கிரனேட்டுகளை படையினர் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த பருத்தித்துறை நீதிவானிடம் காண்பித்தனர். அப்போது நீதிவான் அவற்றை குண்டு செயலிழக்கும் பிரிவினரின் உதவியுடன் செயலிழக்கச் செய்யுமாறு உத்தரவு பிறபித் தார்.

(1-155)

## ஏ-9 பாதையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுப் பேச்சுக்கான திகதியை நிர்ணயிக்க முடியும் என்றும் புலிகள் அறிவித்துவிட்டனர்.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஜெனீவா -2 சமாதானப் பேச்சுவார்த்தைகள் கடந்த இரண்டு நாள்களாக நடைபெற்றன.

இரண்டாவது நாள் பேச்சுகள் நேற்று சுவிஸ் நேரப்படி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகின.

முதல்நாள் பேச்சுகள் பெறுபேறு என்று எதனையும் காட்டாமல் வெறும் அங்குரார்ப்பண நிகழ்வு போலவே நடந்து முடிந்தன. பேச்சுக் குழுக்களின் தலைவர்கள் ஆற்றிய ஆரம்ப உரைகள் தொடர்பான விமர்சனங்கள், பிரதிபலிப்புகளுக்கு அப்பால் பொதுவான நிகழ்ச்சி நிரல் விடயம் பெரும் பூதாகரமான முட்டுக்கட்டையாக எழுந்துநின்றது.

வரம்பே மண்டபத்தில் நடைபெற்ற முதல் நாள் பேச்சுகளிலும் நேற்றைய இரண்டாம் நா பேச்சுகளிலும் வீதி விவகாரமே முக்கியத்துவம் பெற்றிருந்தது.

நேற்றைய பேச்சுக்களின் முடிவில் அனுசரணையாளர்கள் தரப்பில் அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் அரசாங்கத் தரப்பில் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் தனித்தனியாக புறம்புபுறம்பாக பத்திரிகையாளர் மாநாடுகளை நடத்தினர்.

அவற்றில் அவர்கள் மூவரும் அறிக்கைகளை வாசித்து தமது நிலைப்பாடுகளை விளக்கினர்.

### முற்கூட்டியே தெரிவித்தோம்

அரசாங்கம் மூடிவைத்துள்ள ஏ-9 பாதையைத் திறப்பதற்கு பேச்சுக்களில் அரசு இணக்கம் தெரிவிக்கவேண்டும் என்றும் -

அவ்வாறில்லையெனின் அடுத்த கட்டப் பேச்சுக்கு திகதி நிர்ணயிக்க விடுதலைப் புலிகள் சம்மதிக்கமாட்டார்கள் என்று நேற்றைய உதயன் - சுடர் ஒளி பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

(அ-உ)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களை அனுப்ப அரசு தயாராக இருக்கிறது. அதற்கு புலிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஆனால் அவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை.

இந்தியாவில் இருந்து அரிசி, மா, பால்மா போன்ற அத்தியாவசிய பொருள்களை கப்பல் மூலம் எடுத்துவர முயற்சி மேற் கொண்டுள்ளோம். அதற்கு புலிகள் ஒத்துழைப்பு வழங்கவில்லை.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் அமைப்புகளின் உதவியுடன் கப்பலில் கொண்டுவர முயற்சி மேற்கொண்டோம். அதற்குப் புலிகள் ஒத்துழைப்பு வழங்க முன்வரவில்லை.

கப்பல் மூலம் ஐ.நா.வின் கொடியுடன் பொருள்களைக் கொண்டு செல்வது குறித்து ஐ.நா.செயலர் கோபி அனானுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடிதம் அனுப்பினார். அவரின் கடிதத்திற்கு அவரது செயலாளர் பதில் அனுப்பினார். இரு தரப்பு இணக்கப்பாடும் இருக்கவேண்டும் என அவர் பதிலில் தெரிவித்திருந்தார். இதற்கு புலிகள் ஆதரவு தராததால் இன்றைய நிலை தோன்றியுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சிக்கு தரைவழியாக உணவுப் பொருள்களை அனுப்புவதற்கு அனுமதிக்கும் விடுதலைப்புலிகள், யாழ்ப்பாணத்துக்கு கடல் வழியாகப் பொருள்கள் அனுப்புவதை அனுமதிக்காது ஏன் என்பது தெரியாமலுள்ளது.

அரசியல் தீர்வு தொடர்பாக விடுதலைப்புலிகள் கலந்துரையாடினர். இது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இரு கட்சி இணைப்பு, சர்வகட்சி மாநாடு ஆகியன தொடர்பாக எடுத்துக்கூறினோம். முஸ்லிம் மக்கள் பல்வேறு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என அமைச்சர் பேரியல் அஷ்ரப் பேச்சில் தெரிவித்தார்.

அரசியல் தீர்வு, ஜனநாயக செயற்பாடு தொடர்பாக புலிகளின் பிரதிநிதிகள் கலந்துரையாடிய போதும், பேச்சு முழு அளவில் வெற்றியடையவில்லை.

நிபந்தனையின்றி பேச்சுக்கு வருவதாக விடுதலைப் புலிகள் கூறி பேச்சு மேசைக்கு வந்த பின் ஏ-9 பாதை திறப்பு தொடர்பாக புது நிபந்தனை போட்டார்கள். இது துரதிஷ்டவசமானது. இதையிட்டு அரசு கவலையடைகின்றது - என்றார் அவர்.

(1)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org